Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 20-5-1985 திங்கட்கிழமை (வைகாசி 7 - ஷஃபான் 29) முழக்கம் 104

## புதிய யோசனைகள் எதனையும் எஸ்மன்ட் கொண்டு செல்லவில்லை!

"இலங்கை ஜனதிபதியின் விசேஷ தூதராகப் புதுடில்லி சென்று, பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தியைச் சந்தித்த திரு. எஸ்மன்ட் விக்கிரமசிங்கா புதிய யோசனைகள் எதனையும் கொண்டு வரவில்லை" என்று இந்து பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இதனுல் அவருக்கும் பாரதப் பிரதமருக்கும் இடையிலான சந்திப்பு அரை மணி நேரம் மட்டுமே இடம் பெற்றதாகவும், திரு. எஸ்மன்ட் விக்கிரமசிங்கா கொழும்புடன் தொடர்பு கொண்ட பின்னர் ஒருநாள் முன்னராகவே புதுடில்லியில் இருந்து பம்பாய் புறப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. திரு. எஸ்மன்ட் விக்கிரமசிங்கா நேற்று முன்தினம் மாலை கொழும்பு வந்து சேர்ந்தார்.

# றீகல் படமாளிகை தீக்கிரை!

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்துக்கு அருகில் அமைந்திருக்கும், யாழ்ப்பாணத்தின் ஆரம்ப கால படமாளிகைகளில் ஒன்றான 'றீகல்' தியேட்டர் நேற்று அதிகாலை மூன்று மணியளவில் தீக்கிரையாக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கோட்டைக்கு எதிர்ப் பக்கமாக அமைந்திருக்கும் இத்தியேட்டரின் பல லட்ச ரூபா பெறுமதியான கட்டடமும், தளபாடங்களும் மற்றும் உபகரணங்களும் எரிந்து, முற்றிலும் உபயோகமற்றவையாகிவிட்டன.

சில மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட மினிதியேட்டர், குளிரூட்டும் கருவிகள் ஆகியனவும் எரியுண்டன

நேற்றுக் காலைவரை றீகல் தியேட்டர் எரிந்து கொண்டிருந்ததை சுமார் ஒரு மைல் தூரத்திலிருந்தே பார்க்கக் கூடியதாக இருந்ததாயினும், அச்சம் காரணமாகப் பொது மக்கள் எவரும் அந்தப் பகுதிக்குச் செல்லவில்லை.

நேற்று யாழ்நகரில் சனநடமாட்டம் குறைவாகக் காணப்பட்டது. வர்த்தக நிலயங்களும் ஒற்றைக் கதவிலேயே திறந்திருந்தன. போக்குவரத்துச் சேவைகளும் வெகுவாகச் சீர்குலைந்திருந்தது.

★ இம் மாதம் 65 தீவிரவாதிகள் கொலை செய்யப்பட்டனராம் :

# தீவிரவாதிகள் மரணிக்கும் வரை வில்பத்துவில் தீவிர தேடுதல்!

## அனுராதபுரம் தாக்குதலை நடத்தியவர்கள் பற்றியும் லலித் ரூபவாஹினி மூலம் தகவல்

இந்த மாதத்தில் மட்டும் அறுபத்தைந்து தீவிரவாதிகள் பாதுகாப்புப் படையினரால் கொல்லப்பட்டும் எண்பத்தேழு தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுமுள்ளதாக தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி ரூபவாஹினிக்கு அளித்த விசேட பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில் தாக்குதலை நடத்திய தீவிரவாதிகள் குழுவை ஹெலிக்கப்டரில் சென்று பாதகாப்புப்படையினர் தாக்கியதில் மூன்று தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் தெரிவித்த அமைச்சர், வில்பத்து காட்டிற்குள் ஒழித்திருக்கும் தீவிரவாதிகள் அனைவரும் கொலை செய்யப்படும் வரை அல்லது கைது செய்யப்படும் வரையில் அப்பகுதியில் தேடுதல் நடைபெறும் என்றும் சொன்னுர்.

புலிகள் இபக்கமே அனுராதபுரத் தாக்குதலை மேற்கொண்டதாகத் தெரிவித்த அமைச்சர் இக்குழுவினர் தப்பிச் செல்ல முற்பட்ட போது நொச்சியாகம பொலிசார் அவர்களைத் தடுத்து நிறுத்த முயன்றதாகவும் அது முடியாமற் போய் விட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

இராணுவத்தின் எண்ணிக்கை இப்போது அதிகரிக்கப்பட்டு வருவதுடன், புதிய நவீனரக ஆயுதங்கள் இராணுவத்தினருக்காகக் கொள்வனவு

— 4ஆம் பக்கம் பார்க்க

## கிழக்கில் பலர் மரணம்; மேற்கில் வீடுகளுக்கு தீ

கிழக்கு மாகாணத்தில் நேற்று நடைபெற்ற சம்பவமொன்றில் நாற்பது தமிழர்கள் கொலை செய்யப்பட்டதாக யு. பி. ஐ செய்தியை மேற்கோள்காட்டி இந்திய வானெலி நேற்றிரவு அறிவித்தது.

இவர்களது சடலங்கள் பின்னர் சீருடையினரால் தகனம் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டதுடன் திருகோமலையில் பதினைந்து தமிழர்கள் கொலை செய்யப்பட்டதாகவும் இச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது

இதனைத்தவிர கொழும்புக்கு மேற்குப் புறமாகவுள்ள கரையோரத்தில் தமிழருக்குச்

—4-ஆம் பக்கம் பார்க்க

## இப்படியும் நடந்ததாம்!

(சென்னை)

தமிழ்கிராமமொன்றில் ஐம்பது இளைஞர்களை குழிபறிக்கு மாறுபணித்தவர்கள், அவர்களை அக்குழிகளுக்குள்ளேயே உயி

— 4ஆம் பக்கம் பார்க்க

## செனற். பற்றிக்ஸ் வீதியில் சூடுபட்டு ஒருவர் மரணம்; நால்வர் காயம்!

(குருநகர்)

நேற்று நண்பகல் செனற். பற்றிக்ஸ் வீதி வழியாக நடைபவனியில் கத்தோலிக்கச் சவக்காலைக்கு அருகாமையில் வந்தவர்கள் தீர்த்த துப்பாக்கி வேட்டுகளுக்கு இலக்காகிச் சவக்காலையில் உறவினரது ஏழாவது நாள் இழவுக் கிரிகையில் கலந்துவிட்டு வந்து கொண்டிருந்தவர்களில் ஒருவர் மரணம் அடைந்தார். மேலும் நான்கு பேர்கள் காயம் அடைந்தனர்.

மரணமடைந்தவர் யாழ். திட்டியைச்சேர்ந்த அந்தோனி கோவிந்தன் (44) என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. காயமடைந்தவர்கள்: குருநகர் மரியச்சந்திரன் (31) மணியந்தோட்டம் ரி சுப்புலட்சுமி (28) ஈச்சமட்டை எஸ். வீரசிங்கம் (48) குருநகர் என். ரவீந்திரன் (24) இவர்கள் உடனடியாக யாழ். அரசினர் வைத்தியசாலைக்கு அயலவர்

— 4ஆம் பக்கம் பார்க்க

## யாழ்நகர் பொலிஸ் கட்டட வங்கிக் கிளைகள் இவ்வாரம் முதல் இயங்கும்

குருநகரில் மூடப்பட்ட வங்கிகளின் கிளைகளை, நாளை மறுதினம் புதன்கிழமை முதல், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையக் கட்டடத்தில் இயங்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் இப்போது எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி உட்பட மற்றும் தனியார் வங்கிக் கிளைகளுக்கும், பொலிஸ் நிலையக் கட்டடத்தில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பணம் கொடுக்கல் வாங்கலை இக்கிளைகள் மட்டுமே செய்வதால், கடந்த இரண்டு வாரமாக வங்கி வாடிக்கையாளர்களும், பொது மக்களும் பெரிதும் சிரமத்துக்குள்ளாகியிருந்தனர்.

புதிய கிளைகள் பொலிஸ் நிலைய வளவுக்குள் திறக்கப்பட்டாலும், அந்தப் பகுதியில் நிலவும் அசாதாரண சூழ்நிலைகளால் பொது மக்கள் முன்னர் போல வங்கிகளுக்குச் செல்வார்களா என்பது கேள்விக் குறியாகவே இருந்து வருகின்றது.

## ஹெய்டன் இன்று வருகிருர்

அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் திரு ஹெய்டன் இன்று இலங்கைக்கு வருகின்றார். வியாழன் வரை அவர் இங்கு தங்கியிருப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## மீன் சந்தை, இறைச்சிக் கடை பண்ணையிலிருந்து மாறும்

யாழ்ப்பாணம் பண்ணை வெளியில் அமைந்திருக்கும் மீன் சந்தை, இறைச்சி, கருவாடு விற்பனைக் கடைகளை அங்கிருந்து இடமாற்றம் செய்வது பற்றித் தீவிரமாக ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

தற்போது இவை அமைந்துள்ள பகுதிக்குப் பொது மக்கள் போக அஞ்சுவதால் நுகர்வாளர்கள் தேவை நிறைவேற்றப்படாதிருப்பதுடன் விற்பனையும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் பொதுமக்கள் அதிகமாக நடமாடினுல் திடீர் திடீரென பெரிய சத்தங்கள்

— 4ஆம் பக்கம் பார்க்க

அமைச்சர் ஹமீத் பேச்சு:

## இன்றைய பிரச்சினைகளை அரசியல் ராணுவ ரீதியாக தீர்க்க வேண்டும்!

(தெல்தெனிய)

தாக்கிவிட்டு ஓடி ஒழிக்கும் கொள்ளும்தந்திரத்தைத் தீவிரவாதிகள் கையாள்வதால் இவ்வாருன செயல்களை ஒழித்துக் கட்டுவது முடியாத காரியமாகவே உள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத் நேற்று தெல்தெனியாவில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றுகையில் தெரிவித்தார்:

அவர் அங்கு மேலும் பேசுகையில் இலங்கையில் பயங்கரவாதப் பிரச்சினை பல்வேறுபட்ட சிக்கலான தன்மைகளை உள்ளடக்கியதாக உள்ளது. இதனை அரசியல் வழியிலும் இராணுவ முறையிலும் தீர்த்துவைக்க முடியும் என்ருர்.

வளர்ச்சியடைந்த தொழில் நுட்பத்துறையில் முன்னேறிய நாடுகளில் கூட இவ்வாருன பயங்கரவாதப்பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க நீண்டகாலம் சென்றது என்றும் அமைச்சர்

- 4-ஆம் பக்கம் பார்க்க

## அனறீஸ நிறுவன வான் கடத்தல்

நாவற்குழி அன்றீஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான மூன்று இலட்சம் ரூபா பெறுமதிமிக்க வான் ஒன்று புதுக்

— 4ம் பக்கம் பார்க்க

# இன்றைய சூழ்நிலையில் கிராமம் தோறும் பிரஜைகள் குழு ஆரம்பிக்கப்பட வேண்டும்

(சித்தன்கேணி)

ஒவ்வொரு கிராமங்கள் தோறும் பிரஜைகள் குழுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதை இன்று நாம் நன்ருக உணரக்கூடியதாக இருக்கின்றது. எமது பகுதியில் பிரஜைகள் குழு இருப்பதாலேயே இங்கு அகதிகளாய் வந்துள்ள சுமார் எண்ணூறு பேரையும் காப்பாற்றக் கூடிய சக்தி எமக்கு ஏற்பட்டது. தொடர்ந்தும் இந்த அகதிகளை நாம் பராமரிப்பதற்கு பெருந் தொகையான பணமும் உணவுப் பொருட்களும் உடைகளும் எமக்குத் தேவைப்படுகின்றன. பணம் படைத்தவர்கள், நல்ல மனம் படைத்தவர்கள் தங்களால் இயன்ற உதவிகளை எமது பிரஜைகள் குழுவுக்கு அனுப்பிவைத்து எமக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு வட்டுக்கோட்டை சிவன்கோவிலடி பிரஜைகள் குழுத் தலைவர் திரு. எஸ். சின்னப்பாபிள்ளை பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

வட்டுக்கோட்டை விரபத்திர சிவன்கோவிலடியில் நடைபெற்ற வட்டுக்கோட்டை சிவன் கோவிலடி பிரஜைகள் குழுக் கூட்டத்தில் திரு. எஸ். சின்னப்பாபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

உணவு, உடை, இருப்பிட வசதி செய்து கொடுப்பது எமது கடமையாகும்.

பிரஜைகள் குழுப் பொருளாளர் திரு. அ. துரைரத்தினசிங்கம் உரையாற்றும்போது 'எமது பகுதியிலுள்ள பொது ஸ்தாபனங்களும் பொது மக்களும் இதுவரை குறிப்பிடத்தக்க உதவிகளை நல்ல மனத்தோடு செய்து வருகின்றனர். இவர்களது உதவிகளை இன்னும் பல மாதங்களுக்கு எதிர்பார்க்க வேண்டியுள்ளது' என்றும் கூறினார்.

பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலை முன்னாள் விரிவுரையாளர் திரு. அ. அரியரத்தினம், சிவன் கோவிலடி தபால் அதிபர் திரு. ஐ. சௌந்தரராஜன் உட்பட மற்றும் பலரும் இங்கு உரையாற்றினர்.

## அதிபர் அறிவுரை:

# கல்வியே பெரும் செல்வம் மாணவர் உணர வேண்டும்

(மருதங்கேணி)

''மாணவர்களே, கல்வி கற்கும் பொன்னான காலத்தை வீணாக்கி வேறு வழிகளில் ஈடுபடாதீர்கள். கல்வியே பெரும் செல்வம் என்பதை உணர்ந்து செயற்படுங்கள்'' என்று வெற்றிலைக்கேணி மகா வித்தியாலய அதிபராக இருந்து இடமாற்றலாகிச் செல்லும் திரு. என். ஆனந்தராஜ் பெற்றோரால் நடாத்தப்பட்ட சிறப்புக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

''இவ்வித்தியாலயத்தினதும், கிராமத்தினதும் வளர்ச்சிக்குத் தான் தன்னாலியன்றவரை சேவை புரிந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## தனங்கிளப்பு சமாதான சபை

(சரசாலை)

கடந்த ஞாயிற்றுக்கிழமை தனங்கிளப்பு கிராமத்தில் சமாதான சபையொன்றுஅங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. இளைப்பாறிய கிராம சேவையாளர் பொ. நமசிவாயம் தலைவராகவும் ஆசிரியர் அ. தம்பிமுத்து செயலாளராகவும் தெரிவாகினர். பெண்கள் இருவர் உள்ளிட்ட பதினொருபேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவானது.

## அமைதியான குருபூசை

(சரசாலை)

சரசாலை இந்து இளைஞர் மன்றத்தினர் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை தினத்தை மிகவும் அமைதியான முறையில் தீப ஆராதனை, கூட்டுப் பிரார்த்தனைகளுடன் பிள்ளையார் ஆலயத்தில் கொண்டாடினர்.

## பிரச்சினைகள் மத்தியில்

# இந்து இளைஞர் கொடிதினம் நடத்தப்படுவதே சிறப்பு

யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவையினால் 15-ம் திகதி புதன்கிழமை நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் காலை 9 மணிக்கு குருமகா சந்நிதானம் அவர்கள் விழாவை ஆரம்பித்து ஆசியுரை கூறி இன்னும் பல மன்றங்கள்கூடிப் பரவலாகச் செய்ய வேண்டும் எனக் கூறினார். அதன் பின்னர் தலைவர் சண்முகலிங்கமும் மு.சிவராசாவும் திரு. வே. சிவராசாவும் உரையாற்றினார்கள்.

அலை ஓய்ந்தபின் கடலில் குளிப்பது என்று காத்திராமல் பிரச்சினைகள் மத்தியில் இக் கொடித்தினத்தை நடாத்துவதையிட்டுப் பாராட்டினார்கள். திருமதி வசந்தா வைத்தியநாதன் தமது உரையில் இராமர் அணைக்கு மண்இட்ட அணில் கதையைக் கூறினார். இளம் தொண்டர்களின் சேவையைப் பாராட்டினார்.

சிவதர்மவள்ளல் திரு. கனகராசா 'அறஞ்செய விரும்பு' என்ற ஔவையார் வாக்கை நினைவுபடுத்தி தருமம் செய்வதற்கு இப்படியான ஒரு சந்தர்ப்பத்தை மக்களுக்குப் பேரவை வழங்கியதையிட்டு பாராட்டி முதலாவது கொடியை வாங்கி இத்தினத்தை ஆரம்பித்து வைத்தார். அவர் தமது உரையில் தொண்டர்களுக்கான சீர் உடை உடுத்து சேவையாற்ற வேண்டும் எனக் குறிப்பிட்டார். பேரவைச் செயலாளர் திரு. சி. சுவாமிநாதன் நன்றியுரை நிகழ்த்தினார்.

## படகு வேலைகள் ஸ்தம்பிதம்

(புங்குடுதீவு)

தீவுப் பகுதி கடற் போக்குவரத்துச் சேவைகள் யாவும் ஸ்தம்பிதமடைந்துள்ளன. கடந்த புதன்கிழமை காலை நெடுந்தீவிலிருந்து குறிக்கட்டுவான் துறைமுகம் நோக்கி வந்த ''குமுதினி'' படகில் ஏற்பட்ட படுகொலைகளே இதற்குக் காரணமாகும்.

நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு மக்கள் தங்கள் பிரயாணங்களைக் கைவிட்டுள்ளனர்.

## அரியாலையில் ஒளி பிறந்தது

(அரியாலை)

அரியாலைப் பகுதியில் நீண்டகாலமாக மின்குமிழ்கள் இன்றிக் கிடந்த மின்கம்பங்களுக்கு இப்பகுதி இளைஞர்களால் மின்குமிழ்கள் பொருத்தப்பட்டுள்ளன. கனகரட்ணம் வீதி, புருடி வீதி, திருமகள் வீதி, கதிரவேலு வீதி, சாத்திரியார் வீதி, வேவப்பர் ஒழுங்கை, நொத்தாரிஸ் வீதி, கண்டிவீதி ஆகிய வீதிகளுக்கே ஒளி கிடைத்துள்ளது. சுமார் அறுபதுக்கு மேற்பட்ட மின்குமிழ்களை இவ்விதம் பொருத்தியுள்ளனர். இம்முயற்சியைப் பலரும் பாராட்டினார்கள்.




நல்லூர் அரசடி வீதி மகிழ்ஜினி மரக்காலை உரிமையாளர் ஆ. கனகலிங்கம் ஆனந்தராணி தம்பதியரின் கனிஷ்ட புதல்வி மகிழ்ஜினி தனது பத்தாவது பிறந்தநாளை இன்று கொண்டாடுகின்றார்.

மானிப்பாய் சின்னத்தம்பி அவென்யூ, கருணரட்ண ராஜா - பத்மலீலா தம்பதிகளின் மகள் நிரந்தரி இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

நல்லூர் சங்கிலியன் வீதி, வரதராஜா - தர்மாம்பிகை தம்பதிகளின் மகன் அரங்கன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

நீர்வேலி மத்தி, சுப்பிரமணியம் - கமலாதேவி தம்பதிகளின் மகள் துஷிதா இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

திருநெல்வேலி ஆடியபாதம் வீதி, கதிர்காமப்பிள்ளை - சந்திராதேவி தம்பதிகளின் மகள் மிதிலா இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

வவுனியா கந்தசுவாமி கோவில், பாலசந்திரக் குருக்கள் - பாலச்சந்திரேஸ்வரி தம்பதிகளின் மகள் பாலஜெனரி இன்று தனது நான்காவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

தாவடி வடக்கு, வேலாயுதபிள்ளை தம்பதிகளின் மகள் நிரஞ்சலா இன்று தனது ஐந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

மல்லாகம் மேற்கு, நாகநாதன் தம்பதிகளின் மகள் சற்குணதேவி இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

தொல்புரம் கிழக்கு வேலுப்பிள்ளை திரவியமலர் தம்பதிகளின் மகன் அருட்செல்வன் இன்று தனது ஒன்பதாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

அரியாலை முள்ளி ரோட், செல்லத்துரை தில்லைஅம்மா தம்பதிகளின் மகன் தர்மபாலன் தனது பதின்மூன்ருவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறார்,

அரியாலை கிழக்கு, பூம்புகார், பரமநாதன் பாலகுமரி அவர்களின் அன்பு மகன் கவிச்செல்வன் தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

# இயக்கத்தின்பெயரில் போன கொள்ளையருக்கு "சாப்பாடு"

(மிருசுவில்)

வீடு ஒன்றினுள் நள்ளிரவு நேரம் புகுந்த கொள்ளையர்களுக்கு ஊர்மக்கள் நல்ல 'சாப்பாடு' கொடுத்த சம்பவம் ஒன்று வரணியில் நடந்துள்ளது.

இல்லமொன்றினுள் நள்ளிரவு நேரம் புகுந்த நால்வர் முறையாக அகப்பட்டுக்கொள்ளவே தாங்கள் இயக்கமொன்றினைச் சேர்ந்தவர்களென்றும் விசாரணை ஒன்றிற்காக வந்தவர்களென்றும் கூறி தப்பிக் கொள்ள முயன்றனராம்.

ஆனல் இவர்களின் போலி வேடத்தின் அடையாளம் கண்டுகொண்ட ஊர்மக்களால் இவர்கள் மரத்துடன் சேர்த்துக் கட்டப்பட்டு நல்ல 'சாப்பாடு' கொடுக்கப்பட்டதாம்.

பின்னர் அங்குவந்த இளைஞர்கள் இவர்களை மேல் விசாரணைக்காகஅழைத்துச் சென்றதாக அறியப்படுகின்றது.

## வேள்வி விழா

(சித்தன்கேணி)

காரைநகர் மடத்துக்கரை முத்துமாரியம்மன் கோவில் வருடாந்தப் பொங்கல் வேள்வி 17-5-85 வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

இக்கோவில் பொங்கல் விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை 24-ம் திகதியும் 25-ம் திகதி சனிக்கிழமை வேள்வி விழாவும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளன.

## வரி விளம்பரம்


### சேவை

எப்பொருளானாலும் வாங்கவும் விற்கவும் தினமும் வாருங்கள். - ஏல விற்பனை நிலையம் கோப்பாய்.

### விற்பனைக்கு

சுண்டுக்குளியில் பரியோவான் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு 200 யார் தூரத்தில் $2\frac{1}{2}$ பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு பவளாநந்தக்குமாரன், சட்டத்தரணி, 45, கச்சேரி - நல்லூர் வீதி, சுண்டுக்குளி.

தரமான

தங்க - வைர நகைகளை

எண்ணம்போல்

தெரிவுசெய்ய

யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்

நியூ ஆனந்தா ஜுவலர்ஸ்

(வின்ஸர் தியேட்டருக்கு முன்)

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்


## மண் சுமந்த மேனியர்

இந்நாடகத்தை தங்கள் ஊர்களில், பாடசாலைகளில் மேடையேற்ற விரும்புவோர் உடனடியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவ பிரதிநிதிகளுடன் அல்லது கலைப் பேரவையுடன் உடன் தொடர்பு கொள்ளவும். இந்நாடகத்தை 27-05-1985 அன்றும் அதன் பின்னரும் மேடையேற்றத் தயாராய் உள்ளோம் அதற்கு முன்னர் தொடர்பு கொள்ளுங்கள் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்ரேம். நன்றி.

கலைப்பேரவை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி.


36%

அதிக வட்டி வழங்கும் நிதி நிறுவனம்

தமிழர் நிதியம்

140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். ☎ 22437

உதய சிந்தனை

கல்வி கற்பிப்பது கற்றோரின் கடமை. அநீதி பரவாமல் அமைதி நிலவ ஆட்சி புரிவதே அரசாங்கத்தின் அழகு. -- விவேகசிந்தாமணி

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

## இதய ஒலி

20-5-1985 திங்கட்கிழமை (குரோதன வைகாசி 7)

# உண்மையை அறிவதற்கு விசாரணை வேண்டும்

"மழை விட்டும் தூவானம் போகவில்லை" என்பார்கள்.

அனுராதபுரம் தாக்குதல் சம்பவம் நடைபெற்று ஒரு வாரமாகிவிட்டது. ஆனால் தமிழர்களின் சடலங்களை அடையாளம் காண்பதும், உறவினர்கள் வீடுகளுக்கு எடுத்துச் செல்வதும் இன்னமும் முடியவில்லை, தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

தீவிரவாதிகளின் தாக்குதலினால் நூற்று நாற்பத்தாறு சிங்கள மக்கள் கொலை செய்யப்பட்டதாக அரசாங்க அறிக்கை தெரிவித்தது.

அரச வெகுஜன தொடர்புச் சாதனங்கள் மீண்டும் மீண்டும் இதனையே கூறி உலகெங்கும் பறை சாற்றின.

அனுராதபுரம் முழுவதும் வெள்ளைக் கொடிகட்டி துக்கம் அனுஷ்டிக்குமாறு கலாசார அமைச்சர் பகிரங்க வேண்டுகோள் விடுத்தார்.

ஆனால் அங்கு இடம்பெற்ற தொடர் தாக்குதல்களால் எத்தனை தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டதா?

அந்த உயிர்களுக்காக எவராவது அனுதாபம் தெரிவித்தார்களா?

உயிரிலும் சிங்களம், தமிழ் என்று வேறுபாடு உண்டா?

இந்த நாடு முழுவதையும் ஒரு அரசாங்கம்தானே இப்போதும் ஆட்சி நடத்துகின்றது!

அப்படியானால் எத்தனை சிங்களவர்கள் கொல்லப்பட்டார்கள் என்று கணக்குக்காட்டிய அதே அதிகாரிகளால் எத்தனை தமிழர்கள் கொல்லப்பட்டார்கள் என்பதை ஏன் கூற முடியவில்லை;

புகையிரத இலாகா ஊழியர்களின் எட்டுச் சடலங்கள் இங்கு வந்தன.

சில சடலங்கள் வவுனியாவில் தேடுவாரற்றுக் கிடந்தன;

வவுனியா செயலகத்தின் இரு உயர் அதிகாரிகள் எரிக்கப்பட்டனர்.

அடையாளம் காணப்படாத இருபத்தேழு சடலங்கள் அரசாங்க செலவில் அடக்கம் செய்யப்பட்டதாக வானொலிச் செய்தி தெரிவித்தது;

இராணுவ முகாமில் தஞ்சம் புகுந்திருந்த இருபத்தைந்து பேரில் ஆறுபேர் இராணுவ கொப்ரலால் சுட்டுக் கொல்லப்பட்டதாக அரசாங்கமே ஒப்புக் கொண்டது;

தந்தை, மகன், மகள். இந்து மதகுரு, கல்விக் கந்தோர் பெண் ஊழியர் என்று ஐவர் இதில் அடங்குவர்.

இதில் காயமடைந்த மேலும் மூவர் பின்னர் மரணமடைய நேர்ந்தது.

இதனைத் தவிர பெயர் மட்டும் தெரிந்த, ஆனால் உறவினர்களால் அடையாளம் காணப்படாத ஐந்து சடலங்கள் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவை இதுவரை தெரியவந்த விபரங்கள் தெரியாத 'புள்ளிகள்' எத்தனையாக இருக்குமோ!

அனுராதபுரத்துக்கான பழிவாங்கும் சம்பவமாக அமைந்த நெடுந்தீவுப் படகுத் தாக்குதலில் இதுவரை முப்பத்தைந்து பேர் மரணமாக நேர்ந்தது.

மொத்தத்தில் நூற்று நாற்பத்தாறுக்கு, நூற்று நாற்பத்தாறு சரி வரலாம் போலவும் தெரிகின்றது.

இதற்கிடையே அனுராதபுரம் தாக்குதலை பிரதானமான ஐந்து தமிழ் தீவிரவாத இயக்கங்களும் முற்றாக மறுத்துள்ளன.

சென்னையில் இவைகள் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது;

அப்படியானால் முதல் தாக்குதலே "தவறான அடையாள"த்தினால் இடம்பெற்றதாக அடிபடும் வதந்தி உண்மையாக இருக்குமா?

மிகக் கொடூரமான, பல மனித உயிர்களைப் பலிவாங்கிய அனுராதபுரம் சம்பவம் தமிழ் தீவிரவாதிகளால் நடத்தப்பட்டதென்ற அறிக்கைகள் இங்கு சந்தேகத்துக்குரியனவாகியுள்ளன.

மர்மத்துக்கிடமான இச்சம்பவத்தின் உண்மையை அறிய, பாரபட்சமற்ற ஒரு விசாரணைக் கமிஷனை அரசு தாமதமின்றி நியமிக்க வேண்டும்.

## ராஜீவின் ரஷ்ய விஜயத்தின்போது

# இருதரப்பு உறவு, சர்வதேச விடயம் விவாதிக்கப்படும்!

(மாஸ்கோ)

அடுத்த வாரம் சோவியத் யூனியனுக்கு ஒருவார கால உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ள பாரதப் பிரதம மந்திரி திரு ராஜீவ் காந்தி சோவியத் ஜனாதிபதி திரு கொர்பசெவ்வுடன் இருதரப்பு உறவுகள் மற்றும் பிராந்திய சர்வதேச விவகாரங்கள் குறித்து விரிவாக விவாதிப்பார் என நேற்றுப் புதுடில்லியில் பாரத வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரி நிருபர்களிடம் பேசுகையில் தெரிவித்தார். செவ்வாய்க்கிழமை மாலை சோவியத் யூனியனுக்குப் பயணமாகும் திரு ராஜிவ் காந்தி புதன்கிழமையன்று சோவியத் ஜனாதிபதியுடன் எவரது உதவியுமின்றி இரண்டரை மணித்தியாலங்கள்வரை பேச்சுவார்த்தைகள் நடத்துவார் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

தெற்காசிய பிராந்திய நாடுகளின் அமைப்பு வளைகுடாப் போர், ஆப்கானிஸ்தான் நிலைமை ஆகிய விடயங்கள் குறித்துப் பேச்சுவார்த்தைகளின் போது பிரஸ்தாபிக்கப்படும் என்றும் திரு. பண்டாரி கூறியுள்ளார்.

பொருளாதார ஒத்துழைப்புக்கான நீண்டகால ஒப்பந்தம் ஒன்றிலும் கையெழுத்திடப்படும் என்றும் சொன்னார் அவர்:

இது இவ்வாறிருக்க, மாஸ்கோவில் திரு. கொர்பசெவ் பி.ரி.ஐ நிருபருக்கு அளித்த பேட்டி ஒன்றில், இந்து சமுத்திரத்தைச் அமைதிப் பிராந்தியமாக்கும் விடயத்தில் சர்வதேச மாநாடு ஒன்று நடத்தப்படுவதற்கு சோவியத் யூனியன் தயாராக உள்ளது என்று கூறியுள்ளார், இந்து சமுத்திரத்தில் அமெரிக்கா இராணுவ படைபலத்தை அதிகரிப்பது இந்நிலைக்கு முரணானது என்று அவர் குறிப்பிட்டார்.

இப்பிராந்தியத்தில் தற்போது நிலவும் பதற்ற நிலையைத் தணிப்பதற்கு சோவியத் யூனியன் ஒத்துழைக்கும் என்று சொன்ன அவர், பாரதத்துடன் தமது நாடு கொண்டுள்ள நட்புறவு மேன்மேலும் வலுப்பட வேண்டும் என்றும் கூறினர்.

### தஞ்சையில் விபத்து

(தஞ்சாவூர்)

தஞ்சாவூர் பகுதியில் நிகழ்ந்த லொறி விபத்து ஒன்றில் ஐவர் பலியாகினர், பதினைந்து பேர் காயமடைந்தனர். மரம் ஒன்றுடன் மோதியதால் இவ்விபத்து சம்பவித்தது.

## தி.மு.க. தொண்டர் பலருக்கு அபராதம், சிறைத்தண்டனை

(மதுரை)

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மத்திய அரசு போதிய கரிசனை காட்டவில்லை எனக் கூறி காமராஜர் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் ஆகியவற்றிலுள்ள மத்திய அரசு அலுவலகங்கள்முன் மறியல் செய்ய முற்பட்ட ஆயிரத்து நானூறுக்கும் மேற்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

இராமநாதபுரம் தலைமைத் தபால் அலுவலகம் முன் மறியல் செய்ய முற்பட்டவேளை ஐநூற்று நற்பது பேர் கைதானதாகத் தெரிவிக்கப்பட்டது.

கைதானோர்ல் முன்னாள் எம். பி. திரு சத்தியேந்திரனும் அடங்குவார்.

இதற்கிடையில் மத்திய அரசு அலுவலகங்கள் முன்பாக மறியல் செய்ய முற்பட்டதான குற்றச்சாட்டின் பேரில் தி மு. க. தொண்டர்கள் பலருக்கு சிறைத் தண்டனையும், அபராதமும் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ளது

சென்னைமயிலாப்பூர் மத்திய அரசு அலுவலகம் முன் மறியல் செய்ய முற்பட்டதற்காக பத்து நாள் சாதாரண சிறைத் தண்டனையும் மற்றும் சில தொண்டர்களுக்குத் தலா நாற்பத்தைந்து ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

பல்லாயிரக்கணக்கான தி. மு. க. தொண்டர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### சேக்கிழாருக்கு நினைவுச் சின்னம்

(சென்னை)

சேக்கிழாருக்குத் தகுந்த நினைவுச் சின்னம் அமைக்கப்படுமென தமிழக தகவல்துறை அமைச்சர் திரு ஆர் எம் வீரப்பன் தெரிவித்துள்ளார். ஜாதி, இன பேதங்களைக்கடந்த மனோபாவத்துடன் பெரிய புராணத்தை அளித்தவர் சேக்கிழார் என அவர் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் புகழாரம் சூட்டினார்.

## 6 வருடங்களின்பின் ரஷ்ய அமெரிக்க வர்த்தக உறவு

(லண்டன்)

சோவியத்யூனியனும், அமெரிக்காவும் ஆறு வருடங்களுக்குப்பின் வர்த்தக உறவுகளை உருவாக்கி கொள்ளவுள்ளன.

இதன்பொருட்டு அமெரிக்க வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பேல்ரிச் மாஸ்கோ சென்றுள்ளார்.

இன்று இருதரப்பு பேச்சுவார்த்தைகளும் ஆரம்பமாகும்

1972ம் வருடம் இரு நாடுகளுக்கும் இடையே உருவான வர்த்தக உறவுகள் 1979ம் வருடத்தில் முறிந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## திருச்சி சிறைச் சம்பவம்: விசாரணை நடத்த பணிப்பு

(திருச்சி)

திருச்சி மத்திய சிறைச்சாலையில் இலங்கைத்தமிழர் பிரச்சினையில் அனுதாபம் தெரிவிக்க முற்பட்டுச் சிறையில் வைக்கப்பட்டுள்ள தி மு. க. தொண்டர்களுக்கும் ஏற்கனவே வேறு குற்றச்சாட்டுகளின் பேரில் சிறை வைக்கப்பட்டுள்ளவர்களுக்கும் இடையே மூண்ட மோதல் சம்பவம் குறித்து காவல்துறை புலனாய்வு விசாரணை நடத்தும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் நாற்பது பேர் காயமடைந்ததுடன் கூடாரம் ஒன்றும் தீயிடப்பட்டதும் தெரிந்ததே.

### ஈரானில் விமான தாக்குதல்

(லண்டன்)

ஈரானின் தென் பகுதியில் தனது படைகள் ஐம்பத்து இரண்டு தடவை போர் விமானத் தாக்குதல்களை நடத்தியதாக ஈராக் கூறிக் கொள்கிறது.

தனது இத்தாக்குதல்களால் ஈரானின் துருப்புகளுக்கும், சாதனங்களுக்கும் பலத்த சேதம் உண்டாக்கப்பட்டதாகவும் ஈராக் கூறுகிறது.

இராணுவ அறிக்கை ஒன்றின் மூலம் இதனை ஈராக் தெரிவித்துள்ளது.

## தென் ஆபிரிக்காவில் 9,000 ஊழியர் வேலை நிறுத்தம்

(ஜொஹனஸ்பேக்)

தென்னாபிரிக்காவில் ஒன்பதாயிரம் சுரங்கத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது

இதன் எதிரொலியாக இடம் பெற்ற மோதலின் போது பொலிசார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்ய நேரிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வேலை நிறுத்தம் மேற்கொண்ட பல நூற்றுக்கணக்கான சுரங்கத் தொழிலாளர்களை தென்னாபிரிக்க வெள்ளையர் அரசு சில வாரங்களுக்கு முன் வேலை நீக்கம் செய்தது என்பது நினைவு கூரத்தக்கது.

### லண்டனில் சந்திப்பு

(லண்டன்)

மேற்கு ஜெர்மனித் தலைவர் திரு கோலும் பிரிட்டிஷ் பிரதம மந்திரி திருமதி. மார்கிரெட் தச்சரும் லண்டனில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்

## "மாதர் பங்கின்றி வளர்ச்சியில்லை"

(புதுடில்லி)

ஜாதி, மத பேதங்களைக் களைந்து நாட்டின் ஒற்றுமைக்கு இளைஞர்கள் பாடுபடவேண்டும்." என்று பிரதம மந்திரி திரு. ராஜிவ் காந்தி புதுடில்லியில் நடைபெற்ற இளைஞர் காங்கிரஸ் கூட்டத்தில் பேசுகையில் கேட்டுக்கொண்டார்.

மகளிர் பங்கின்றி முன்னேற்றமில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஈழமுரசு

## நெல் மூடைகளுடன் சேர்த்து மூன்று லொறிகள் கடத்தப்பட்டன

(திருமலை)

நெல்மூடைகளுடன் சென்ற நெல் சந்தைப்படுத்தும் சபைக்குச் சொந்தமான மூன்று லொறிகள் இனம் தெரியாத நபர்களால் கடத்திச்செல்லப் பட்டன. மூதூருக்கு அருகிலுள்ள மல்லிகைத் தீவு என்ற இடத்தில் இச்சம்பவம் நடைபெற்றது. சுமார் பதினைந்து லட்சம் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுள்ள நெல் ஏற்றப்பட்டு கொழும்புக்குப் புறப்பட ஆயத்தமாகையில் லொறிகள் கடத்தப்பட்டனவாம். இக்கொள்ளை பற்றி பொலிஸில் புகார் செய்யப்பட்டபோதிலும் லொறியோ, நெல்லோ இன்னமும் மீட்கப் படவில்லை. திருமலைப்பகுதியில் தேடுதல் வேட்டை பலப்படுத்தப்பட்டுள்ளது.

பிரதமர் பிரேமதாசாவின் பேச்சு

# பழிவாங்கும் நடவடிக்கை பிரச்சினையைத் தீர்க்காது!

(கலவான)

''நாட்டை இன்று எதிர் நோக்கும் வன்முறைப் பிரச்சினைக்குப் பழிவாங்கும் தன்மையுடன் நடந்து கொள்வதன் மூலமோ அல்லது சுயநலப் போக்கு மூலமோ, குறுகிய நோக்கத்தைப் பின்பற்றுவதன் மூலமோ சொந்த அரசியல் இலாப நோக்கத்தை முன் வைத்தோ தீர்வுகாண முடியாது. நாம் இதைச் செய்ய முற்பட்டால் தீவிரவாதிகள் தமது நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு சந்தர்ப்பத்தை அளிப்பதாக அமையும்.''

இவ்வாறு பிரதம மந்திரி ஆர். பிரேமதாஸ கலவானத் தொகுதியில் மாதிரிக் கிராமம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றுகையில் கூறினர்.

''நாம் புத்திசாலித் தனமாக இந்நேரத்தில் நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது'' என்ருர் அவர்.

''சகல சமூகத்தவரும் ஒன்றுபட்டு இலங்கையைத் தமது தாய் நாடாகக் கருதி அரசியல் வேறுபாடுகளை மறந்து நாட்டின் ஐக்கியம், இறைமை ஆகியவற்றையும் பாதுகாக்க முன் வரவேண்டும்'' என்றும் அவர் கூறினர்.

''பயங்கரவாத அச்சுறுத்தலை உலகிலுள்ள பெரும்பாலான ஜனநாயக நாடுகள் எதிர்நோக்கியிருக்கின்றன. இந்தியாவை இப்பிரச்சினை மோசமாகப் பாதித்துள்ளது. இலங்கை மீது தாக்குதல் நடத்தும் தீவிரவாதிகள் அங்குதான் முகாம்களை வைத்திருக்கிருர்கள். பயங்கரவாத நடவடிக்கைகளினுல் அரசாங்கத்துக்குப் பெரும் இழப்பு உண்டாகியுள்ளது. இதனுல் முழு நாடுமே பாதிக்கப்படுகிறது. இப்பிரச்சினை இனவாதமோ அல்லது மொழிப்பிரச்சினையோ அல்ல'' என்றும் பிரதம மந்திரி கூறினர்.

### தீவிரவாதிகள்...

செய்யப்படுகின்றன. ஆனுல் இவை மட்டும் இப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கப் போதாது என்றும் இப்பேட்டியில் குறிப்பிட்டார்.

அரசின் இரகசிய உளவுச் சேவை பற்றிக் குறிப்பிட்ட அமைச்சர், இப் பிரிவின்வனர்ச்சியால் தீவிரவாதிகளால்திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் பற்றி முன்பே அறிந்து அவற்றைமுறியடிக்கக் கூடியதாக உள்ளது எனவும் தெரிவித்தார்.

### சென். பற்றிக்ஸ்..

1-ஆம் பக்கத் தொடர்

களின் உதவியுடன் எடுத்துச் செல்லப்பட்டனர்.

மேலும் பத்துக்கும் மேற்பட்டவர்கள் அழைத்துச் செல்லப் பட்டதாகவும் கூறப்படுகிறது. இடிமுழக்கத்துடன் மழைபெய்துகொண்டிருக்கையில்நிகழ்ந்த இச் சம்பவத்தை அடுத்து குருநகப் பகுதியில் பதற்ற நிலை உருவாகிக் கடைகள் மூடப் பட்டதுடன் வாகன, பொது மக்களின் நடமாட்டமும் குறைந்து வீதிகள் வெறிச் சோடிக் காணப்பட்டன.

### இப்படியும் நடந்த..

— 1ஆம் பக்கத் தொடர்

ருடன் வைத்துப்புதைத்துவிட்டதாக சென்னையில் தமிழீழ விடுதலை அமைப்பு தெரிவித்துள்ளது. மற்றெரு சம்பவத்தில் சுடப்பட்டதில் ஐவர் பலியானதாகவும் எழுவர் காயமுற்றதாகவும் அது மேலும் தெரிவித்துள்ளது.

### அன்றீஸ் நிறுவன..

1-ஆம் பக்கத் தொடர்

குடியிருப்பில் வைத்து துப்பாக்கி ஏந்திய நான்கு இளைஞர்களால் சென்ற வியாழக்கிழமை கடத்திச் செல்லப்பட்டதன் எதிரொலியாக பல தொழிலாளர் அவதியுறும் நிலை உண்டாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரு நாட்களில் திருப்பித் தருவதாகக் கூறியே வான் கடத்தப்பட்டதாயினும் இன்னமும் திருப்பிக் கொடுக்கப் படவில்லையாம்.

### மீன் சந்தை..

- 1ஆம் பக்கத் தொடர்

கேட்கத் தொடங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர ஆணையாளர் திரு. சி. வீ. கே. சிவஞானம், யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் ஆகியோரிடம் இக்கடைகளை இடமாற்றுவது தொடர்பாக பலர் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

### கிழக்கில் பலர்...

—1ஆம் பக்கத் தொடர்

சொந்தமான பல வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதாகவும் இச் செய்தி மேலும் தெரிவித்தது. அதேவேளை, நீர்கொழும்பு பகுதியில் நேற்று பிற்பகல் இரண்டு மணி முதல் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டது.

## ஹாட்லி, மெதடிஸ்த கல்லூரி 6—8 வகுப்புகள் இடமாற்றம்

(புலோலி)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரிகளின் 6ம் வகுப்புத் தொடக்கம் 8ம் வகுப்பு வரையான வகுப்புகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மெதடிஸ்த பெண்கள் கல்லூரியின் 6ம் வகுப்பு தொடக்கம் 8ம் வகுப்பு வரையிலான வகுப்புகள் வட-இந்து மகளிர் கல்லூரிக்கும், ஹாட்லிக் கல்லூரியின் 6ம், 7ம் வகுப்புகள் தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயத்திற்கும், 8ம் வகுப்பு புலோலி, புற்றளை மகா வித்தியாலயத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

இவ்விரு கல்லூரிகளினதும் 9ம், 10ம், 11ம், 12ம் வகுப்புகள் ஏற்கனவே வட - இந்து மகளிர் கல்லூரிக்கும் புலோலி புற்றளை மகா வித்தியாலயத்திற்கும் இடமாற்றம் செய்யப் பட்டிருந்த போதும் 6ம், 7ம், 8ம் வகுப்புகள் இடமாற்றம் செய்யப்படாமல் இயங்கி வந்தன.

அதேவேளை, பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத்தின் பாலர் வகுப்புத் தொடக்கம் 5ம் வகுப்பு வரையான வகுப்புகள் வேலாயுதம் ஆண்கள் ஆங்கில மகா வித்தியாலயத்திற்கும், 6 தொடக்கம் 10ம் வகுப்பு வரையான வகுப்புகள் தட்டாதெரு பாடசாலைக்கும் மாற்றப்பட்டுள்ளதாக வித்தியாலய அபிவிருத்திச் சங்கம் அறிவித்துள்ளது.

### சுந்தரையா காலமானுர்

(சென்னை)

மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியஸ்தரும், சுதந்திரப் போராட்ட வீரருமான திரு. சுந்தரையா (72) நேற்று சென்னையில் காலமானுர்.

### இன்றைய பிரச்..

—1ஆம் பக்கத் தொடர்

ஹமீத் அங்கு தெரிவித்தார்.

இலங்கையின் இனப்பிச்சினையை ஜனுதிபதி ஜெயவர்தனுவால்மட்டும் தான் தீர்த்து வைக்க முடியுமென்றும் சொன்ன ஹமீத், பயங்கரவாதப் பிரச்சினைக்கு நிதியைச் செலவிடும் அதே வேளையில், அபிவிருத்தி வேலைகளுக்கும் பணம் செலவிடவேண்டியுள்ளதென்று சொன்னுர்.


# I. C. M. A.

"எமது போதனையில் மாபெரும் சாதனை"

கடந்த I.C.M.A. பரீட்சையில் அகில உலகிலும், F A.I, என்ற பாடத்தில் முதற் பரிசையும், மூன்ருவது பரிசையும் பெற்றவர்கள் எமது மாணவர்களே!

01-06-85 முதல்

பாடநெறிகள் ஆரம்பமாகின்றன

- I.C.M.A. Section A, B, Part I
- Chartered Preliminary
- I.A.A. Part I & II
- I.A.B. All stages

விரிவுரையாளர் குழு:

V. கருணுநிதி, K. P. அரவிந்தன், ஜோய் டேவிட், S. R. உதயணன், Mrs. S. மூர்த்தி

குறிப்பு:

மாணவர் பாதுகாப்புக் கருதி, வகுப்புக்கள் யாவும் 212, கச்சேரி நல்லூர் வீதியில் நடைபெறும்.

விபரங்களுக்கு:

RAPID RESULTS INSTITUTE

58, Stanley Road Jaffna.

"GOOD WINE NEEDS NO BUSH"



## ஈழமுரசு ஆசிரிய பீடம் பதவி வெற்றிடங்கள்

ஈழமுரசு அலுவலக ஆசிரிய பீடத்தில் கடமையாற்றுவதற்குப் பின்வரும் பதவிகளுக்கு உடனடியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ பயிற்சி உதவி ஆசிரியர்கள் (TRAINEE SUB - EDITORS)

★ அலுவலக நிருபர்கள்

★ யாழ்ப்பாண நகரப் பகுதியில் கடமையாற்றுவதற்குப் பகுதி நேர நிருபர்கள்.

தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் போதிய அறிவும், பத்திரிகைத் தொழிலில் அனுபவமும் ஆர்வமும் இருப்பவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

யாழ்ப்பாண நகரிலிருந்து மூன்று மைல் சுற்றுடலில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

என்வலப்பின் இடதுபக்க மேல் மூலையில் பதவியை குறிப்பிட்டு, தபால் மூலம், 28 - 5 - 85 க்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்ப வேண்டும்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
ஈழமுரசு,
37, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.



## வேலை வாய்ப்புக்கள்

1. தையல் காரர்கள்
2. முடிவெட்டுபவர்கள்
3. கட்டிட வேலைகளுக்கான சகலரும்
4. சாரதிகள்

உடனடி வேலைவாய்ப்புக்களுக்கான அறிவுரைகளையும், ஒழுங்குகளையும் பெற்றுக் கொள்ள உடன் தொடர்பு கொள்ளவும்.

S. N. பாலகிருஷ்ணன்
27, வயிரவர் கோவில் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.


"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைஸிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால், 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 20-05-1985 திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி : 22886.